2007 ஜனவரி 27] [பேரவைத் தலைவர்]

(ஆ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2007), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 1–00

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2007)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 43 வரை, திருத்தங்கள் இல்லை.

[@] *22-1-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

சட்டமன்றம் TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பிரிவுகள் 2 முதல் 43 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 1, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

முகப்புரை

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the enacting formula for the expression 'Fifty-seventh', *substitute* the expression 'Fifty-eighth'."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2007 ஜனவரி 27] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

திருத்தம் ஏற்கப்பட்டது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

நெடுந்தலைப்பு, திருத்தங்கள் இல்லை.

நெடுந்தலைப்பு சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடபபடுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைத் திரும்பக் கொண்டு வர வேண்டும் என்று போராடிய கல்லூரி ஆசிரியர்களுடைய கடந்த கால 25 நாட்களுக்கான பணி ஊதியத்தையும்கூட வழங்கும் அளவுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் கடந்த காலங்களிலே போராடியவர்களுக்கான அந்தக் காலத்தையும் பணிக் காலமாக கருதுவேன் என்று சொன்ன அறிவிப்புக்கிணங்க, அவர் அந்த 25 நாட்களையும் பணிக் காலமாகக் கருத வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[டாக்டர் க. பொன்முடி] [2007 ஜனவரி 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2007) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

6. அறிவிப்பு

பேரவை நடவடிக்கைகள் குறித்த வழக்குகளில் நீதிமன்றங்களின் ஆணைகள், அறிவுறுத்தல்களைச் செயலாளர் மற்றும் அலுவலர்கள் ஏற்க வேண்டியதில்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓர் அறிவிப்பு. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இந்தப் பேரவைக்கு அளிக்கப்பட்டுள்ள இறையாண்மையைப் பாதிக்கின்ற வகையில் பேரவை நடவடிக்கைகளை விசாரணைக்கு ஆட்படுத்தித் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் குறித்து நீதிமன்றம்மூலம் அனுப்பப்படும் எந்தவொரு ஆணையோ, அறிவுறுத்தலோ இப்பேரவையைக் கட்டுப்படுத்தாது. எனவே, இப்பேரவையின் ஆணைகளை நிறைவேற்றி வைக்கின்ற பொறுப்பில் உள்ள பேரவைச் செயலாளரோ அல்லது செயலகத்தின் ஏனைய அதிகாரிகளோ நீதிமன்றம்மூலம் அனுப்பப்படும் எவ்வித நோட்டீசையோ, ஆணையையோ, அறிவுறுத்தலையோ ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை எனப் பேரவையின் அனுமதியோடு நான் ஆணையிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)